# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.tn.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 19 / 2025**

திரு I. ஜாண்போஸ்கோ,
18C5/2, அருள் ஜோதி இல்லம், நடராஜன் தெரு,
பொன்னப்பநாடார் காலனி, நாகர்கோவில்,
கன்னியாகுமரி மாவட்டம் – 629004.

………மேல்முறையீட்டாளர்
(Rep. by திரு S.R. சுகுமார்)

எதிர்

செயற்பொறியாளர்/ விநியோகம் / நாகர்கோவில்,
கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
பார்வதிபுரம், நாகர்கோவில் – 629 003.

. .. . எதிர்மனுதாரர்
(திரு N.K. ஜவஹர் முத்து, செயற்பொறியாளர்/ விநியோகம் / நாகர்கோவில்)

**மனு பெறப்பட்ட நாள்: 03-03-2025**

**கேட்புரை நாள்: 17-04-2025**

**ஆணை நாள்: 25-04-2025**

03.03.2025 அன்று பெறப்பட்ட திரு I. ஜாண்போஸ்கோ, 18C5/2, அருள் ஜோதி இல்லம், நடராஜன் தெரு, பொன்னப்பநாடார் காலனி, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் – 629004 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 19/2025 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 17.04.2025 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

1. **மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

மேல்முறையீட்டாளர் தனது மின் இணைப்பு எண் 07-123-015-126 மற்றும் 07-123-015-716 ஆகிய மின் இணைப்புகளை Merging செய்துள்ளது சரியென்று கன்னியாகுமரி மின்பகிர்மான வட்டம்/நாகர்கோவில் உத்தரவு பிறப்பித்துள்ளதை இரத்து செய்து உத்தரவு பிறப்பிக்குமாறு விண்ணப்பித்துள்ளார்.

2.0 **வழக்கின் சுருக்கம்:**

2.1 மேல்முறையீட்டாளர் தனது மின் இணைப்பு எண் 07-123-015-126 மற்றும் 07-123-015-716 ஆகிய மின் இணைப்புகளும் விதிமுறைகளின்படி பயன்படுத்தப்படுகின்றன என தெரிவித்துள்ளார்.

2.2 மேற்குறிப்பிட்ட இரு மின் இணைப்புகள் தரைதளம் மற்றும் முதல்தளம் கொண்ட ஒரே வீடு ஒரே குடும்பத்தினர் உபயோகித்து வருவது களஆய்வு செய்த போது தெரியவந்ததால் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் பகிர்மான விதி 27(15A)-இன்படி இரு மின்இணைப்புகளும் merging செய்யப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எதிர்மனுதாரரின் பதிலில் திருப்தி இல்லாததால் மேல்முறையீட்டாளர் கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 12.09.2024 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம் 13.11.2024 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 **மன்றத்தின் தீர்வு :**

3.1 கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 13.11.2024 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றத்தின் தீர்வு:*
*"மனுவில் குறிப்பிட்டுள்ள மின்னிணைப்பு எண்கள் 123–015–126 மற்றும் 123–015–716–ற்கு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் விதிமுறை எண் 27(15A) –ன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால் இம்மனு தள்ளுபடி செய்து ஆணை பிறப்பிக்கப்படுகிறது."*

4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 17.04.2025 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் சார்பாக திரு S.R. சுகுமார் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர் திரு N.K. ஜவஹர் முத்து, செயற்பொறியாளர்/ விநியோகம் / நாகர்கோவில், கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகளில் இம்முறையீட்டு மனுவிற்கு சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 மனுதாரர் Parkinson மற்றும் Sugar நோயினால் பாதிக்கப்பட்டு 7 வருடகாலமாக நடக்க முடியாமல் படுக்கையில் சிகிச்சை எடுத்து வருவதை தனது மனுவில் குறிப்பிட்டுள்ளதை நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் கருத்தில் கொள்ளாமல் 19.10.2024

அன்று நேரடி விசாரணைக்கு கலந்து கொள்ளவில்லை என்று கூறி ஒருதலைபட்சமாக உத்தரவு பிறப்பித்துள்ளதாகவும், தனது பெயரில் இரண்டு வீடுகளுக்கும் தனித்தனி வீட்டு எண் மற்றும் தனித்தனி வரிவிதிப்பு எண் நாகர்கோவில் மாநகராட்சியால் கொடுக்கப்பட்டுள்ள சொத்துவரி கேட்பு அறிவிப்பு நகலை மனுவுடன் இணைத்து உள்ளதை பரிசீலிக்க நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தவறியுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 வீட்டின் அடித்தளத்தில் உள்ள கதவு எண். 18CS/2 வரிவிதிப்பு எண் 150/044/901331 எனவும், இதற்கான மின்இணைப்பு எண் 07-123-015-126 எனவும், இந்த வீட்டில் தானும் தனது வயதான மனைவியும் தனது மூத்தமகன் J.T.பிரகாஷ் மற்றும் அவனது மனைவி ஷைனி சைலஸ் ஆகியோர்கள் வசித்து வருவதாகவும், தங்களுக்கு தனியாக குடும்ப அட்டை உள்ளதாகவும், குடும்ப அட்டை எண்.NPHH333071404289 எனவும், இதற்கான ஆவணங்களை தனது மனுவுடன் இணைத்துள்ளதை நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் பரிசீலிக்க தவறியுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 வீட்டில் மேல்தளத்தில் கதவு எண்.18C5/3, உள்ள வரிவிதிப்பு எண். 150/044/901643 எனவும், இதற்கான மின்இணைப்பு எண்.07-123-015-716 எனவும், இந்த வீட்டில் தனது இளையமகன் J.T.பிரதீஷ் மற்றும் அவனது மனைவி வளர்மதி ஷைனி வல்சலம், அவரது பிள்ளைகள் P.S.ஷாம் ஜோஸ்வா, P.S.ஜாண் பீட்டர், P.S.ஜாண் பால் ஆகியோர்கள் வசித்து வருகிறதாகவும், அவர்களுக்கு தனியாக குடும்ப அட்டை உள்ளதாகவும், NPHH333410718999 எனவும், அவர் வசித்து வருகிற மேல்வீட்டிற்கு செல்ல வெளி கேட்டிலிருந்து தனியாக வெளிப்பகுதி வழியாக ஏணிப்படி உள்ளதாகவும், இருவீட்டிற்கும் தனித்தனியாக சமையலறை, குளியலறை, கழிவறை அந்தந்த வீட்டிலேயே உள்ளதாகவும், இதற்கான ஆவணங்களை தனது மனுவுடன் இணைத்துள்ளதை நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் பரிசீலிக்க தவறியுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 எதிர்மனுதாரர் களஆய்வு செய்ததாகவும் அது இரண்டு மின்இணைப்புகளுடன் கூடிய தரைத்தளம் மற்றும் முதல்தளம் கொண்ட ஒரே வீடு, ஒரே குடும்பத்தினர்

உபயோகித்து வருகின்றனர் என்று கூறியுள்ளது உண்மைக்கு புறம்பானதாகும் எனவும், நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் எதிர்மனுதாரரின் கூற்றின் உண்மை தன்மையை ஆராயாமல் எதிர்மனுதாரரின் பொய் கூற்றை உண்மையென நம்பி தவறுதலாக இந்த உத்தரவு பிறப்பித்துள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 இருவேறு கதவு எண்கள், இருவேறு வரிவிதிப்பு எண்கள் கொண்ட இரண்டு வீடுகளில் தனித்தனி குடும்பம் (ஒரு தந்தையின் பிள்ளைகள்) தனித்தனி குடும்ப அட்டை பெற்று, தனித்தனியே வாழ்ந்து வருவதை கருத்தில் கொள்ளாமல் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் வகுத்துள்ள விதிமுறை எண்.27 (15A)–ன்படி இருமின் இணைப்புகளையும் Merging செய்ய எதிர்மனுதாரர் பரிந்துரைக்கப்பட்டு அதனை ஏற்று கொண்டதாக நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் ஆணை பிறப்பித்திருப்பது இயற்கை நீதிக்கு முரணானதாகும் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 எனவே மாண்புமிகு இம்மேல்முறையீட்டு மன்றம் இந்த மேல்முறையீட்டை ஏற்று 07–123–015–126 மற்றும் 07–123–015–716 ஆகிய மின்இணைப்புகளை Merging செய்துள்ளது சரியென்று தவறுதலாக கன்னியாகுமரி மின்பகிர்மான வட்டம்/நாகர்கோவில் உத்தரவு பிறப்பித்துள்ளதை இரத்து செய்து மேற்படி இரு மின்இணைப்புகளுக்கும் தனித்தனி கதவு எண்கள் கொண்ட வீடுகளில் தனித்தனி குடும்ப அட்டை கொண்ட தனித்தனி குடும்பங்களே பயன்படுத்தி வருகிறது என்பதை உறுதி செய்து, தனித்தனியாக மின்கட்டணம் கணக்கீடு செய்ய உத்தரவு பிறப்பிக்குமாறு மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

6.1 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தினரால் நடத்தப்பட்ட கேட்புரை நாள் 19.10.2024 அன்று அவருடைய மகன் செயற்பொறியாளர்/விநியோகம்/நாகர்கோவில் அவர்களை சந்தித்து மனுதாரர் திரு. I. ஜாண்போஸ்கோ உடல் நிலை சரியில்லாததால் வரமுடியவில்லை என்றும் தனக்கும் சொந்த பணிகள் இருப்பதால் கலந்து கொள்ள இயலவில்லை என கூறிவிட்டு கேட்புரை கூட்டம் நடக்கும் முன்பே அன்னார் சென்று

விட்டதாகவும், எனவே மனுதாரர் ஒருதலைபட்சமாக உத்தரவு பிறப்பித்தது என்பது ஏற்றுகொள்ள இயலாது என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 மனுதாரர் மனுவுடன் இணைத்துள்ள இரண்டு வீட்டுக்கான வரிவிதிப்பு நகலை கூர்ந்தாய்வு செய்ததில் இரண்டும் ஒரே நபர் பெயரில் உள்ளதாகவும், மேலும் களஆய்வில் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்களே ஒரே வளாகத்தில் உள்ள வீட்டில் குடியிருந்து வருகின்றதாகவும், ஆகையால் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் பகிர்மான விதி 27(15A) யின் படி ஒரு வளாகத்தில் ஒரு நபருக்கு மின் இணைப்புக்கு தகுதியுடையவர் என்பதால் இரண்டு மின் இணைப்புகளும் கணினியில் LT billing மென் பொருளில் merging செய்யப்பட்டது சரிதான் எனவும், எனவே ஆவணங்களை நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் பரிசீலிக்க தவறியுள்ளது என்பது ஏற்றுக்கொள்ள இயலாது என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 மனுதாரர் தனது குடும்பத்தினர் ஆகிய மனுதாரர் அவரின் மனைவி மூத்த மகன் அவரின் மனைவி மற்றும் இளையமகன் அவரின் மனைவி ஆகியோரே கட்டிடத்தின் தரைதளம் மற்றும் மேல் தளத்தினை பயன்படுத்துவதாக மனுவில் குறிப்பிட்டுள்ளதாகவும், மேலும் தனியாக குடும்ப அட்டை உள்ளதாக கூறியுள்ளதாகவும், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் மாற்றியமைக்கப்பட்ட Tariff order 2024–ஆண்டின் படி புதிய மின் இணைப்பு வழங்கும்போது ஒரே கட்டிடத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட மின் இணைப்பு கேட்டால் ஒரே குடும்ப நபர்கள் வசிக்கும் பட்சத்தில் தனித்தனி குடும்ப அட்டை இருக்குமானால் கூடுதலாக மின் இணைப்பு வழங்க கூறப்பட்டுள்ளதாகவும், ஆனால் இந்த மின் இணைப்புகள் ஏற்கனவே வழங்கப்பட்டவை என்பதால் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைத்தின் பகிர்மான விதி 27(15A) யின் படி merging செய்யப்பட்டது சரிதான் எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 மனுதாரர் மனுவுடன் இணைத்துள்ள இரண்டு வீட்டுக்கான வரிவிதிப்பு நகலை கூர்ந்தாய்வு செய்ததில் இரண்டும் ஒரே நபர் பெயரில் உள்ளதாகவும், மேலும் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்களே ஒரே வளாகத்தில் உள்ள வீட்டில் குடியிருந்து வருகின்றதாகவும், ஆகையால் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைத்தின் பகிர்மான விதி 27(15A) யின் படி ஒரு வளாகத்தில் ஒரு நபருக்கு மின் இணைப்புக்கு

தகுதியுடையவர் என்பதால் இரண்டு மின் இணைப்புகளும் கணினியில் LT billing மென் பொருளில் merging செய்யப்பட்டதாகவும், எனவே ஆவணங்களை நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் பரிசீலிக்க தவறியுள்ளது என்பது ஏற்றுக்கொள்ள இயலாது எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 ஒரே வளாகத்தில் உள்ள கட்டிடத்திற்கு ஒரு நபரின் பெயரில் இரண்டு மின் இணைப்புகள் பெற்று ஒரே குடும்பத்தினர் பயன்படுத்தி வருவது களஆய்வில் தெரியவருவதால் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் பகிர்மான விதி 27(15A) யின் படி இரு மின் இணைப்புகளும் merging செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் பிறப்பித்த ஆணை சரிதான் எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் தன்னுடைய வீட்டின் அடித்தளத்தில் உள்ள கதவு எண். 18CS/2 வரிவிதிப்பு எண் 150/044/901331 எனவும், இதற்கான மின்இணைப்பு எண் 07-123-015-126 எனவும், இந்த வீட்டில் தானும் தனது வயதான மனைவியும் தனது மூத்தமகன் J.T.பிரகாஷ் மற்றும் அவனது மனைவி ஷைனி சைலஸ் ஆகியோர்கள் வசித்து வருவதாகவும், தங்களுக்கு தனியாக குடும்ப அட்டை உள்ளதாகவும், குடும்ப அட்டை எண்.NPHH333071404289 எனவும், வீட்டில் மேல்தளத்தில் கதவு எண்.18C5/3, உள்ள வரிவிதிப்பு எண். 150/044/901643 எனவும், இதற்கான மின்இணைப்பு எண்.07-123-015-716 எனவும், இந்த வீட்டில் தனது இளையமகன் J.T.பிரதீஷ் மற்றும் அவனது மனைவி வளர்மதி ஷைனி வல்சலம், அவரது பிள்ளைகள் P.S.ஷாம் ஜோஸ்வா, P.S.ஜாண் பீட்டர், P.S.ஜாண் பால் ஆகியோர்கள் வசித்து வருகிறதாகவும், அவர்களுக்கு தனியாக குடும்ப அட்டை உள்ளதாகவும், NPHH333410718999 எனவும், அவர் வசித்து வருகிற மேல்வீட்டிற்கு செல்ல வெளி கேட்டிலிருந்து தனியாக வெளிப்பகுதி வழியாக ஏணிப்படி உள்ளதாகவும், இருவீட்டிற்கும் தனித்தனியாக சமையலறை, குளியலறை, கழிவறை அந்தந்த வீட்டிலேயே உள்ளதாகவும், இதற்கான ஆவணங்களை தனது மனுவுடன்

இணைத்துள்ளதை நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் பரிசீலிக்க தவறியுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.3 இருவேறு கதவு எண்கள், இருவேறு வரிவிதிப்பு எண்கள் கொண்ட இரண்டு வீடுகளில் தனித்தனி குடும்பம் (ஒரு தந்தையின் பிள்ளைகள்) தனித்தனி குடும்ப அட்டை பெற்று, தனித்தனியே வாழ்ந்து வருவதை கருத்தில் கொள்ளாமல் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் வகுத்துள்ள விதிமுறை எண்.27 (15A)–ன்படி இரு மின் இணைப்புகளையும் Merging செய்ய எதிர்மனுதாரர் பரிந்துரைக்கப்பட்டு அதனை ஏற்று கொண்டதாக நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் ஆணை பிறப்பித்திருப்பது இயற்கை நீதிக்கு முரணானதாகும் எனவும் 07–123–015–126 மற்றும் 07–123–015–716 ஆகிய மின்இணைப்புகளை, தனித்தனியாக மின்கட்டணம் கணக்கீடு செய்ய உத்தரவு பிறப்பிக்குமாறு மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.4 மனுதாரர் தனது குடும்பத்தினர் ஆகிய மனுதாரர் அவரின் மனைவி மூத்த மகன் அவரின் மனைவி மற்றும் இளையமகன் அவரின் மனைவி ஆகியோரே கட்டிடத்தின் தரைதளம் மற்றும் மேல் தளத்தினை பயன்படுத்துவதாக மனுவில் குறிப்பிட்டுள்ளதாகவும், மேலும் தனியாக குடும்ப அட்டை உள்ளதாக கூறியுள்ளதாகவும், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் மாற்றியமைக்கப்பட்ட Tariff order 2024–ஆண்டின் படி புதிய மின் இணைப்பு வழங்கும்போது ஒரே கட்டிடத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட மின் இணைப்பு கேட்டால் ஒரே குடும்ப நபர்கள் வசிக்கும் பட்சத்தில் தனித்தனி குடும்ப அட்டை இருக்குமானால் கூடுதலாக மின் இணைப்பு வழங்க கூறப்பட்டுள்ளதாகவும், ஆனால் இந்த மின் இணைப்புகள் ஏற்கனவே வழங்கப்பட்டவை என்பதால் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைத்தின் பகிர்மான விதி 27(15A)– இன்படி merging செய்யப்பட்டது சரிதான் எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.5 ஒரே வளாகத்தில் உள்ள கட்டிடத்திற்கு ஒரு நபரின் பெயரில் இரண்டு மின் இணைப்புகள் பெற்று ஒரே குடும்பத்தினர் பயன்படுத்தி வருவது களஆய்வில் தெரியவருவதால் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைத்தின் பகிர்மான விதி 27(15A) யின் படி இரு மின் இணைப்புகளும் merging செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் பிறப்பித்த ஆணை சரிதான் எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.6 எதிர்மனுதாரர் தமிழ்நாடு மின்சாரப் பகிர்மான விதித் 27(15A)–ஐ சுட்டிக்காட்டி மேல்முறையீட்டாளர் ஒரு மின்இணைப்புக்கு தான் தகுதியானவர் என வாதிட்டதால் அவ்விதி ஆய்வுக்காக கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"27. Requsitions for Supply for Energy:*

*(15A) Notwithstanding anything contained in sub-regulations (14) and (15), a person or an establishment or an entity shall be given only one service connection in a premises or in contiguous premises to run a business or service or occupation or another form of activity including its associated activities and for activities of the associates even if there isa permanent physical segretation."*

(14) மற்றும் (15)ஆம் ஒழுங்குமுறை விதிகளில் எப்படி இருந்த போதிலும், ஒரு நபர் அல்லது நிறுவனம் அல்லது தனித்தன்மையான நிறுவனம் ஆகியவற்றிற்கு ஒரு வளாகத்தில் அல்லது சேர்ந்திருக்கும் வளாகங்களில் அவை நிரந்தரமாக புறநிலை தனிமைப்பட்ட இடங்களாக இருந்தாலும், ஒரு தொழிலுக்கோ அல்லது சேவைக்கோ அல்லது பணிக்கோ அல்லது அதன் ஐக்கிய பணி நடவடிக்கைகள் உள்ள வேறுவிதமான அமைப்பில் இருக்கும் நடவடிக்கைகளுக்கோ, மற்றும் சார்ந்தவர்களின் பணிக்கோ ஒரே ஒரு மின்னிணைப்பு மட்டுமே வழங்கப்படும் என்று அறியமுடிகிறது.

7.7 எனவே, இது சம்பந்தமாக மேலும் விளக்கம் பெற தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய Tariff Order Tariff Order No. 7 of 2022 dt. 09.09.2022–இல் பத்தி 6.2.2.1–இல் கூறப்பட்ட சாராம்சங்கள் ஆராயப்படவேண்டும், அந்த விதிமுறைகள் கீழே கொடுக்கப்படுகிறது.

*"6.2.2* ***Low Tension Tariff I-A : (Domestic, Multi-tenements, Old age homes, Handlooms)***

***6.2.2.1 This tariff is applicable to the following:***

*(a) Dwelling purposes of lights, fans, Air conditioners, TV, and all other home appliances. "Dwelling Unit " means an independent housing unit of residential purpose with separate facilities for living, cooking and may be a part of a building.*

*Only one service connection is permissible in an independent floor/dwelling unit with permanent physical and electrical segregation. If more than one service co exists already, only one service is eligible to be retained under classification of this tariff. The balance number of services shall be converted to tariff ID and charged accordingly.*

*The independent status of floor/dwelling unit with permanent physical /electrical segregation as specified in TNE Distribution Code can be very well inspected and confirmed onsite inspection. In case such independent status is not evident and clear to the inspecting officer, the rental / lease agreement may be insisted. In case of same family members, separate family cards may be insisted in lieu of rental/ lease agreement.*

*xxx*
*xxx"*

7.8 மேற்கூறிய தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய சாராம்சத்தின்படி சுயதான நிலையில் தளம்/குடியிருப்பு ஆய்வுகளின் மூலம் அதனின் நிரந்தரமான புறநிலை தனிமைப்படுத்துதல்/தனித்தனி மின் இணைப்புகள் இருப்பின் ஆய்வின் மூலம் அறிய வேண்டும். அவ்வாறு அறிய இயலாத நிலையில் ஒரே குடும்பம் சார்ந்தவராக இருந்தால் தனித்தனியான குடும்ப அட்டையை பெற்று முடிவெடுக்க வேண்டும் என அறிய முடிகிறது.

7.9 திரு I. ஜாண்போஸ்கோ தன்னுடைய வீட்டின் தரைதளத்திற்கும் மற்றும் முதல் தளத்திற்கும் பெற்ற மின் இணைப்பான 07–123–015–126, நாள் 20.02.2002–இல் பெறப்பட்டதும் மின் இணைப்பு எண் 07–123–015–716 நாள் 21.08.2007–இல் பெறப்பட்டதும் அறிய முடிகிறது. மேலும், திரு I. ஜாண்போஸ்கோ தரைதளத்தில் கதவு எண்.18C5/2 உள்ள வரிவிதிப்பு எண். 150/044/901331 கொண்ட இலக்கத்தில் தனி குடும்ப அட்டை மற்றும் மின் இணைப்பு எண் 07–123–015–126 உடன் வசிப்பதும், மேல் தளத்தில் அவரது இளையமகன் J.T.பிரதீஷ் கதவு எண்.18C5/3 இலக்கத்தில் (வரிவிதிப்பு எண். 150/044/901643) தனி குடும்ப அட்டை மற்றும் மின் இணைப்பு எண் 07–123–015–716 உடன் தனித்தனியாக வசிப்பது உறுதியாகிறது, அதாவது இரண்டு தளத்திலும் ஒரே நபர் இல்லாமல் ஒரு குடும்பத்தை சார்ந்த இருவர் வசிப்பது உறுதியாகியுள்ளது.

7.10 மேலும் எதிர்மனுதாரர் சமர்பித்த ஆவணங்களின் மூலம் மேற்கூறிய வீடானது தரைதளம் மற்றும் முதல்தளம் நிரந்தரமாக புறநிலையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதும், இரண்டு தளங்களுக்கு தனித்தனி சொத்துவரி இருப்பதும், இரண்டு தளத்திலும் ஒரு குடும்பத்தை சார்ந்த நபர்கள் தனித்தனிக் குடும்ப அட்டையுடன் வசிப்பதையும் உறுதி செய்யமுடிகிறது. அவ்வாறு உள்ள நிலையில் மின் இணைப்பு எண்ணை கட்டணம் வசூலிப்பதற்காக மெய்நிகர் இணைத்தல் மூலம் இரண்டும் மின் அளவியின் பயன்பாட்டின் அடிப்படையில் ஒரு மின் இணைப்பு எண்ணான 07–123–015–126–இல் கட்டணம் வசூலிப்பதும் தெரிய வருகிறது.

7.11 ஆனால் எதிர்மனுதாரரின் இந்த நடவடிக்கை மேற்கூறிய தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் Tariff Order No. 7 of 2022 dated 09.09.2022 –இன்படி

சரியான நிலைப்பாடாக இல்லை என்பது தெரியவருகிறது. அதாவது ஒரே குடும்பத்தை சார்ந்தவர்கள் தனித்தனியே நிரந்தரமாக புறநிலை தனிமைப்பட்ட தரைதளம் மற்றும் முதல் தளத்தில் வெவ்வேறு குடும்ப அட்டையுடன் வசிக்கும் நிலையில் திரு I. ஜாண்போஸ்கோ 2002 மற்றும் 2007 காலகட்டத்தில் பெறப்பட்ட மின் இணைப்பு எண் 07–123–015–126 மற்றும் 07–123–015–716 மெய்நிகர் இணைத்தல் மூலம் (virtual merger of service for billing) ஒரே மின் இணைப்பாக நடைமுறைப்படுத்தியது தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் விகிதப்பட்டியில் குறித்துரைக்கப்பட்ட வழிமுறைகளுக்கு முரணாக இருப்பதால் எதிர்மனுதாரரின் நடவடிக்கை தள்ளுபடி செய்யப்பட்டு மேல்முறையீட்டாளரின் குடியிருப்பில் மெய்நிகர் இணைப்பிற்கு முன்இருந்த நிலையான தனித்தனி மின் இணைப்பாக தொடர ஆணையிடப்படுகிறது.

8.0 <u>முடிவுரை:</u>

8.1 மேற்கூறிய பத்திகளில் உள்ள தீர்வின்படி, மேல்முறையீட்டாளர் மின் இணைப்பு எண் 07–123–015–126 மற்றும் 07–123–015–716 ஆகிய மின் இணைப்புகளை Merging செய்த எதிர்மனுதாரரின் நிலைப்பாட்டை சரியென்று கன்னியாகுமரி மின்பகிர்மான வட்டம்/நாகர்கோவில் வழங்கிய உத்தரவு இரத்து செய்யப்பட்டு மேல்முறையீட்டாளரின் குடியிருப்பில் மெய்நிகர் இணைப்பிற்கு முன்இருந்த நிலையான தனித்தனி மின் இணைப்பாக தொடர ஆணையிடப்படுகிறது.

8.2 மேற்கண்ட தீர்வை நிறைவேற்றியமைக்கான அறிக்கையை இந்த ஆணை கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து 30 நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென உத்திரவிடப்படுகிறது.

8.3 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 19/2025 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்

1. திரு I. ஜாண்போஸ்கோ, - By RPAD
18C5/2, அருள் ஜோதி இல்லம், நடராஜன் தெரு,
பொன்னப்பநாடார் காலனி, நாகர்கோவில்,
கன்னியாகுமரி மாவட்டம் – 629 004.

2. செயற்பொறியாளர்/ விநியோகம் / நாகர்கோவில்,
கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
பார்வதிபுரம், நாகர்கோவில் – 629 003.

3. மேற்பார்வை பொறியாளர், – By email
கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
பார்வதிபுரம், நாகர்கோவில் – 629 003.

4. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5. செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் – By email
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

6. உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

This document was created with the Win2PDF “Print to PDF” printer available at

https://www.win2pdf.com

This version of Win2PDF 10 is for evaluation and non-commercial use only.
Visit https://www.win2pdf.com/trial/ for a 30 day trial license.

This page will not be added after purchasing Win2PDF.

https://www.win2pdf.com/purchase/